செ.வெ.எண்.01 நாள்: 02.11.2020

**தூத்துக்குடி மாவட்டம் சமூக பாதுகாப்புத்துறை குழந்தை பாதுகாப்பு அலகு மூலம் குழந்தை பேணுதல் மற்றும் குழந்தை பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய 20000 அஞ்சலக சேமிப்பு கணக்கு புத்தகத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டார்.**

---

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சமூக பாதுகாப்புத்துறை குழந்தை பாதுகாப்பு அலகு மூலம் குழந்தை பேணுதல் மற்றும் குழந்தை பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய அஞ்சலக பாஸ் புக்கினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் இன்று (02.11.2020) வெளியிட்டார். அதனை அஞ்சலக கோட்ட கண்காணிப்பாளர் திரு.உதய்சிங் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:

தூத்துக்குடி மாவட்டம் சமூக பாதுகாப்புத்துறை குழந்தை பாதுகாப்பு அலகு மூலம் குழந்தை பேணுதல் மற்றும் குழந்தை பாதுகாப்பு தொடர்பாக பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள், குழந்தை திருமணம், குழந்தை தொழிலாளர், சட்ட விரோத குழந்தை தத்தெடுத்தல் ஆகியவை குறித்து பொதுமக்களிடம் கொண்டு சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் சமூக பாதுகாப்புத்துறையின் மூலம் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய 20000 அஞ்சலக பாஸ் புக்குகள் அச்சடிக்கப்பட்டு இன்று அஞ்சல் துறையிடம் வழங்கப்படுகிறது. இந்த பாஸ் புக்குகளை தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள 4 தலைமை அஞ்சலகம் மூலம் அனைத்து அஞ்சலகத்திலும் கணக்கு துவங்கும் பொதுமக்களிடம் வழங்கி குழந்தைகள் பாதுகாப்பு தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தி குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் இல்லா நிலையை உருவாக்க வேண்டும் என பேசினார்.

நிகழ்ச்சியில் அஞ்சலக கோட்ட மக்கள் தொடர்பு ஆய்வாளர் திரு.நகாராஜ், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திருமதி.மகராசி, பாதுகாப்பு அலுவலர்கள் திருமதி,சுரேத்வானி, திரு.ஜேம்ஸ் அதிசயராஜ் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.